CC 425/2020

05.11.2024.

பு.சா.1,

பெயர்: செல்வக்குமார்

த/பெ. கிருஷ்ணசாமி

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent. 317 Petition filed and allowed. Accused counsel present.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எதிரியை அவரது கணவர் மூலமாக எனக்கு பழக்கம் என்றால் சரிதான். 18.08.2019 ம் தேதியன்று நான் எதிரிக்கு பணம் கொடுத்தேன். பணம் கொடுக்கும்போது எதிரியும் அவரது கணவரும் உடனிருந்தார்கள். எதிரிக்கு பணம் கொடுத்ததாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரிக்கு எத்தனை கட்டுகளாக பணம் கொடுத்தேன் என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. நான் 2016 ம் ஆண்டுதான் வருமான வரி செலுத்தியுள்ளேன். நான் 2020 வரை வருமான வரி செலுத்தியுள்ளேன் என்று கூறியிருந்தால் அது தவறு. நான் இதுபோன்ற வழக்குகளை வேறு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான், அந்த வழக்கினை அந்த நீதிமன்றத்திலிருந்து இந்த நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட்டார்கள்.

மேற்படி வழக்கு சமரசம் செய்து முடிக்கப்பட்டது. நான் வட்டி வரவு செலவு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு கணினி மூலம் கொடுத்து எதிரியிடம் பல காசோலைகளையும், கடனுறுதி சீட்டுகளையும் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் எந்த தொகையையும் வாங்கவில்லையென்றாலும், எதிரியை எனக்கு யாரென்றே தெரியாதென்றாலும் சரியல்ல, 3 நபர்கள் சாட்சியாக இருக்கிறார்கள். 500 ரூபாய் நோட்டுகளாக நான் பணம் கொடுத்தேன். எதிரி மீது பொய்யாக வழக்கு புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam, B.A.B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.